O.S. No: 87/2015

பெயர் : சுவாமிநாதன்

**பி.சா.1**

03-07-2025

**10,11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தகப்பனார் நாகராஜ படையாச்சிக்கு இரண்டு மனைவி. முதல் மனைவி பெயர் சுந்தராம்பாள். அவருக்கு பிறந்தது 3 ஆண், 3 பெண். 2 வது மனைவி சந்திராவிற்கு 4 ஆண், 1 பெண். என் தாயாருக்கு நான் வாரிசு சான்று வாங்கியிருக்கிறேன். என் தாயார் இறக்கும் போது தகப்பனார் உயிருடன் இருந்தார். வாரிசு சான்றுதலில் என் தகப்பனார் நாகராஜன் மற்றும் 3 ஆண் வாரிசுகள் பெயர் உள்ளது. அதில் பெண் வாரிசுகள் காண்பிக்கப்படவில்லை என்றால் ஆமாம். அலவந்திபுரம், திருவலஞ்சுழியில் 209/3 ஏ, 209/3 பி, 209/3 சி ஆகியவை என் தகப்பனார் பெயரில் உள்ளது. உயில் மூலம் அவருக்கு கிடைத்தது. இந்த சொத்தை விற்பதற்கு 6 ஆம் பிரதிவாதி விஜயராஜை தவிர என் தகப்பனார் மற்ற ஆண் வாரிகள் அனைவரும் 28/01/2009 அன்று ஒரு சுப்ரமணியன் என்பவருக்கு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்திருக்கிறோம் என்றால் ஆமாம். அந்த பொது அதிகார ஆவணத்தை வைத்து பவர் ஏஜெண்ட் சுப்ரமணியன் ஒரு விஜயா என்பவருக்கும், ஒரு ஆண்டிசாமி என்பவருக்கும் இந்த சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். இந்த சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த சொத்துக்கள் நாராஜ படையாச்சியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அதில் எனக்கோ, வாதிகளுக்கோ மற்ற பிரதிவாதிகளுக்கோ எந்த உரிமையோ இல்லை என்றால் சரியல்ல.

**12 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரமாண வாக்குமூலம் முதல் விசாரணை சாட்சியத்திற்காக நான் மொத்தம் 6 பக்கம் தாக்கல் செய்திருக்கிறேன். இந்த விவரங்களை நான் வழக்கறிஞர்

செல்வராஜியிடம் சொல்லி அவர் அடித்தார் . எங்கள் குடும்பம் என்பது வம்சாவளி சீனன் படையாச்சியிடம் இருந்து வருகிறது . சீனன் படையாச்சி தான் ஆரம்பத்தில் சொத்துக்களை வாங்கினார். சீனன் படையாச்சி 3 மகன்கள், ராமசாமி, பக்கிரிசாமி, நடேச படையாச்சி. சீனன் படையாச்சி காலத்தில் வம்சாவளி சொத்துக்கள் கிடையாது. 1950 ஆம் வருடம் அப்போதைய சட்டப்படி பெண்களுக்கு பாக உரிமை கிடையாது என்றால் ஆமாம் . அப்போதைய கூட்டு குடும்பம் என்பது சீனன் படையாச்சி, ராமசாமி, பக்கிரிசாமி, நடேச படையாச்சி என்றால் ஆமாம் . 1950 இல் பாகம் பிரித்த போது , கூட்டு குடும்பம் தனி குடும்பமானது . 1950 இல் நடேச படையாச்சி தனி குடும்பம் என்றால் ஆமாம் . நடேச படையாச்சிக்கு வாரிசு முறைமையில் பாகம் கிடைத்ததா என்றால் பாகப்பிரிவினை மூலம் கிடைத்தது . என்னுடைய வாக்குமூலத்தில் பக்கம் 4 இல் 6 வது பாராவில், மேற்கண்ட சீனன் படையாச்சி குமாரர்கள் , சீனன் படையாச்சி மறைவிற்கு பிற்பாடு அவர்களின் குமாரர்கள் உயிலின் மூலம் சொத்துக்களை பிரித்துக்கொண்டார்கள் . அது பதிவு செய்யப்பட்ட உயிலாகும். ஆவணப்படி சொத்தை பிரித்துக்கொண்டால் நடேச படையாச்சிக்கு அது தனி சொத்தாகிறது என்றால் ஆமாம் . என்னுடைய கட்சியில் நான், நடேச படையாச்சிக்கு தனி சொத்தாகிவிட்டது என்று சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன் . நடேச படையாச்சி உயில் எழுதும் போது பெண்களுக்கு சட்டத்தில் உரிமை கிடைத்துவிட்டதா என்றால் தெரியாது . தனிப்பட்ட சொத்தாக இருந்தால் குடும்ப தலைவர் தான் நடேச படையாச்சி என்றால் சரி. 1956 இல் அவர் குடும்ப கர்த்தா கிடையாது. அவர் குடும்ப தலைவர் தான். நடைச படையாச்சி குடும்பத்தில் 1956 இல் நடேச படையாச்சி அவருடைய மகன் நாகராஜன் மற்றும் தையல் நாயகி மகள் என்றால் ஆமாம் . 1956 இல் நடேச படையாச்சி உயில் எழுதாமல் இருந்திருந்தால் நடேச படையாச்சிக்கு பாதி பாகம் , நாகராஜனுக்கு பாதி

பாகம் என்றால் சரி . 1956 இல் தையல் நாயகிக்கு தனிப்பட்ட உரிமை கிடையாது . அந்த சொத்து பொது சொத்தாக இருந்தால் , நடேச படையாச்சிக்கு அந்த பாதி சொத்து, பொது சொத்தாகிறது என்றால் எனக்கு தெரியாது . 1966 இல் உயில் எழுதும் காலத்தில் கூட்டு குடும்ப வாரிசுதாரர் உரிமை இல்லாதவர் தையல் நாயகி என்றால் எனக்கு தெரியாது. தையல் நாயகி கூட்டு உரிமையாளர் அல்ல என்றால் தெரியாது. கூட்டு உரிமையாளர் இரண்டு பேர் தான் ஒன்று நடேச படையாச்சி மற்றொன்று நாகராஜன் என்றால் சரி . 1966 வரை நடேச படையாச்சி குடும்பம் தனி குடும்பமாகிவிட்டது என்றால் சரி . நாகராஜ படையாச்சிக்கு உயில் மூலம் தான் சொத்து கிடைத்தது. வாரிசு முறமையில் இல்லை என்றால் சரி. அதே போல் தையல் நாயகிக்கும் அந்த உயில் மூலம் தான் சொத்து கிடைத்தது . வாரிசு முறமையில் இல்லை என்றால் சரி . 1966 இல் நாகராஜ படையாச்சிக்கு உயில் மூலம் கிடைத்த சொத்துக்கள் அவருடைய தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் ஆமாம் . அந்த தனிப்பட்ட சொத்துக்களை நாகராஜ படையாச்சி 04/07/2009 அன்று 12 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது . நாகராஜ படையாச்சியின் தனிப்பட்ட சொத்துக்களை மோசடி செய்வதற்காக நானும் , என்னுடைய சம்மந்தியான முதல் வாதியும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.